மோட்டார் வாகன விபத்து கோரிக்கை உரிமை தீர்ப்பாயம்/
முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை :– திருமதி. P. சுதா, B.Com., B.L.,
மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாய நடுவர்
(முதன்மை சார்பு நீதிபதி) மயிலாடுதுறை.

திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 26 ஆம் நாள்
2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 09 ஆம் நாள், வியாழக்கிழமை

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாய அசல் மனு எண்.73/2020

சரண், வயது 19, த.பெ.செல்வராஜ், ... மனுதாரர்

//எதிர்//

1. சின்னப்பராஜ்,

2. கிளை மேலளாளர்,
பஜாஜ் அலையன்ஸ் ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ்
கம்பெனி லிட்., சென்னை,

3. முருகன்,

4. கிளை மேலாளர்,
நியூ இந்தியா அஸ்யூரன்ஸ் கம்பெனி லிட்.,
பொறையார். ... எதிர்மனுதாரர்கள்

இம்மனு என் முன்பாக 11.03.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரருக்காக வழக்குரைஞர் திரு.M.திருமால்சுந்தரம் அவர்கள் ஆஜராகியும், 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.M.மனோஜ்குமார் அவர்கள் ஆஜராகியும், 4 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.K.ராஜ்மோகன் அவர்கள் ஆஜராகியும், 1, 3 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர் நிலையில் வைக்கப்பட்டும், மனுதாரர் மற்றும் 2, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்றைய தினம் இந்நீதிமன்றம் வழங்கும் ...

SUDHA P
Digitally signed by SUDHA P
Date: 2026.04.09 18:50:34 +0530

உத்தரவு

இம்மனு மோட்டார் வாகனச் சட்டப்பிரிவுகள் 140 மற்றும் 166 ன் கீழ் மனுதாரர் சரண், வயது 19, த.பெ.செல்வராஜ் என்பவர் சாலை விபத்தில் கொடுங்காயம் அடைந்ததற்கு இழப்பீடாக ரூ.50,00,000/-(ரூபாய்.ஐம்பது இலட்சம் மட்டும்) எதிர்மனுதாரர்களிடம் இருந்து பெற்றுத் தரக்கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இம்மனு முதலில் மாண்புமிகு மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்தில் 24.08.2020, 28.10.2020 ஆகிய தேதிகளில் தாக்கல் செய்யப்பட்டு, அங்கு 05.11.2020 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதன் பிறகு மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற உத்தரவு எண்.1/20/A, நாள் 02.01.2020 தேதியிட்ட உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு 11.11.2020 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

02. மனுதாரர் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம் :-

மனுதாரர் பொறையார் TBML கல்லூரியில் 3 ஆம் ஆண்டு இளநிலை வேதியியல் பட்டப்படிப்பு படித்து வருவதாகவும், காலை, மாலை வேளைகளிலும், விடுமுறை தினங்களிலும் மனுதாரர் விவசாயப் பணிகள் செய்து மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/-க்கும் குறையாமல் வருமானம் ஈட்டி தனது குடும்பத்திற்கு கொடுத்து வந்தும், கல்லூரிப்படிப்பையும் தொடர்ந்து வந்ததாகவும், மனுதாரரின் பகுதிநேர வருமானம் அவரது குடும்பத்திற்கு பேருதவியாக இருந்து வந்ததாகவும், இந்நிலையில் கடந்த 09.12.2019 ஆம் தேதி கல்லூரிக்கு சென்றுவிட்டு திரும்ப வீட்டுக்கு வருவதற்காக 3 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான T.N.51 AX 3637 என்ற பதிவெண் கொண்ட நிவேதா தனியார் பேருந்தில் ஏறி பேருந்தின் வலது ஜன்னல் ஓரமாக அமர்ந்து பயணம் செய்து வந்ததாகவும், மாலை 3.30 மணியளவில் பேருந்து சங்கரன்பந்தல் அடுத்து எரவாஞ்சேரி பாலம் அருகே கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தபோது பேருந்துக்கு எதிரே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி, வாழைத்தார்கள் ஏற்றிக்கொண்டு அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவரப்பட்ட T.N. 68 AA 6015 என்ற பதிவெண் கொண்ட மஹிந்திரா மினி டிரக்கை

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:50:43 +0530

ஓட்டிவந்த அதன் ஓட்டுநர் வாகனத்தை பேருந்தின் வலது ஓரத்தில் மோதியதில் மனுதாரருக்கு வலது முன்கையில் எலும்புகள் முறிந்து கொடுங்காயம் ஏற்பட்டும், வலது மணிக்கட்டில் எலும்புமுறிவு ஏற்பட்டும், வலது கை முழுவதும் சதை சிதைந்து விட்டதாகவும், காயமடைந்த மனுதாரர் அங்கிருந்தவர்கள் உதவியுடன் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கு முதல் உதவி சிகிச்சை பெற்று, அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மயிலாடுதுறை கிருஷ்ணா மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு கடந்த 09.12.2019 முதல் 24.12.2019 வரை சிகிச்சை பெற்று வந்ததாகவும், மனுதாரருக்கு மேற்படி மருத்துவமனையில் கடந்த 09.12.2019 ஆம் தேதி அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாகவும், மனுதாரர் தற்போது வெளிநோயாளியாக இருந்து தனியார் மருத்துவரிடம் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாகவும், அதன் பிறகு கடந்த 31.07.2020 முதல் 04.08.2020 வரை மனுதாரர் மீண்டும் கிருஷ்ணா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, முழுங்கையில் உள்ள தகடு அகற்றப்பட்டதாகவும், மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்றும், மனுதாரருக்கு வலது கை முழுவதும் விபத்தினால் முற்றிலுமாக பாதிக்கப்பட்டு விட்டதாகவும், சிகிச்சை அளித்தும் பூரண குணமாகவில்லை என்றும், மனுதாரருக்கு வலது கையில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக நிரந்தர ஊனம் ஏற்பட்டதால் மனுதாரரால் முன்புபோல பகுதி நேர வருமானம் ஈட்ட முடியாத நிலையில் கஷ்ட ஜீவனம் செய்து வருவதாகவும், மனுதாரர் வலதுகை மடக்கவோ, நீட்டவோ முடியாமலும், கல்லூரிக்கு செல்லவோ, எழுதவோ, படிக்கவோ முடியாமலும் அடுத்தவர்கள் துணையை நாட வேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளதாகவும், மேலும் மனுதாரர் வலிவேதனையால் அவதியுற்று, அவரது குடும்பத்திற்கு சொல்லொண்ணா கஷ்டத்தை ஏற்படுத்தி உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்துக்கு காரணம் விபத்து சமயத்தில் T.N. 68 AA 6015 என்ற பதிவு எண் கொண்ட டாடா ஏசிஇ வாகனத்தை ஓட்டிவந்த 1 ஆம் எதிர்மனுதாரர் ஓட்டுநரும், மனுதாரர் பயணம் செய்த T.N 51 AX 3637 என்ற பதிவெண் கொண்ட பேருந்தை ஓட்டிவந்த 3 ம் எதிர்மனுதாரர் ஓட்டுநருமே ஆவார்கள் என்றும் 1, 3 எதிர்மனுதாரர்கள் ஓட்டுநரின் அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும், கவனக்குறைவினாலும் தான் இந்த விபத்து ஏற்பட்டதாகவும், அவர்கள் மீது

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:50:52 +0530

பொறையார் காவல் நிலைய குற்ற எண்.228/2019–ல் இ.த.ச.பிரிவுகள் 279, 337ன் படி குற்றவழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி விபத்தை ஏற்படுத்திய வாகனங்கள் 1, 3 எதிர்மனுதாரர்களுக்கு சொந்தமானது என்றும், 1 ஆம் எதிர்மனுதாரர் வாகனம் 2 ஆம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அக்காப்பீடு விபத்து தேதியில் அமலில் உள்ளதாகவும், மேலும் மனுதாரர் பயணம் செய்த வாகனம் 3ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது, 3 ஆம் எதிர்மனுதாரர் வாகனம் 4 ஆம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி விபத்தினால் தற்சமயம் கல்லூரிப்படிப்பை தொடர முடியாமலும், பகுதி நேர வருமானம் ஈட்ட முடியாமலும் மிகுந்த சிரமப்படுவதாகவும், மனுதாரரின் வலதுகை முற்றிறம் பாதிக்கப்பட்டு மனுதாரரின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விட்டதாகவும், எதிர்காலத்தில் வேலைக்குச் செல்லவோ, மேல்படிப்பு படிக்கவோ, வருமானம் ஈட்டவோ முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் மனுதாரரின் திருமண வாழ்க்கையும் கேள்விக்குறி ஆக்கப்பட்டுள்ளதாகவும், இதுவரை ரூ.5,00,000/–த்திற்கும் அதிகமாக செலவாகியுள்ளதாகவும், தொடர் சிகிச்சை பெற வேண்டிய நிலையில் உள்ளதால் வெளிநபர்களிடம் கடன்கள் வாங்கி மருத்துவச் செலவு செய்து வருவதால் மிகுந்த பொருளாதார நெருக்கடியில் மன உளைச்சலுடன் வாழ்ந்து வருவதாகவும், மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்தினால் மனுதாரரும், அவரது குடும்பத்தாரும் பெரும் மனஉளைச்சலுக்கு ஆளாகியுள்ளதாகவும், எனவே மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட வலி, துன்பம், வருமான இழப்பு, நிரந்தர ஊனம் மருத்துவ செலவுகளுக்காக ரூ.50,00,000/– (ரூ.ஐம்பது லட்சம்) நஷ்ட ஈடு கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

<u>03) 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :–</u>

பதிவு எண் TN 68 AA 6015 கொண்ட 'Mahindra Supro Mini Truck' வாகனத்தின் மீதான முதல் எதிர்மனுதாரரின் வாகனம் விபத்து காலகட்டத்தில், 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீட்டுக் கொள்கையின் கீழ் காப்பீடு

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:51:01 +0530

செய்யப்பட்டிருந்தது என்பதை ஒப்புக்கொள்வதாகவும், எனினும், இக்காப்பீடானது அக்கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள், நிபந்தனைகள், விலக்குகள் மற்றும் வரம்புகளுக்கு உட்பட்டது என்றும், மேலும் இது 'காப்பீட்டுச் சட்டம், 1938 இன் பிரிவு 64VB–இன் கீழ் அமைந்துள்ளது என்றும், காப்பீட்டுதாரர்/முதல் எதிர்மனுதாரருக்குச் சாதகமாக வழங்கப்பட்ட காப்பீட்டுக் கொள்கையானது எண் OG–20–1507–1803–00000498, இது 01/08/2019 முதல் 31/07/2020 வரையிலான காலத்திற்குச் செல்லத்தக்கது என்றும், இக்காப்பீட்டுக் கொள்கையானது தற்போது காப்பீட்டுதாரர்/முதல் எதிர்மனுதாரரின் வசம் உள்ளதாகவும், 2 ஆம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் செலுத்தப் பொறுப்பானவர் அல்ல என்றும், மனுதாரரின் கோரிக்கைக்குப் பதிலளிக்க 2 ஆம் எதிர்மனுதாரர் கடமைப்பட்டவர் அல்ல என்றும், மனுவில் கூறப்பட்டுள்ள விதத்தில் விபத்து நிகழவில்லை என்றும், TN 68 AA 6015 என்ற பதிவு எண் கொண்ட 'Mahindra Supro Mini Truck' வாகனத்தின் ஓட்டுநர் மீது கவனக்குறைவு என்ற குற்றச்சாட்டைச் சுமத்தும் நோக்கத்துடன், விபத்து நிகழ்ந்த விதம் வேண்டுமென்றே திரித்துக் கூறப்பட்டுள்ளதாகவும், மோட்டார் வாகன ஆய்வறிக்கையின்படி, இரண்டு வாகனங்களிலும் எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்றும், ***மனுதாரர் பேருந்தின் ஜன்னலுக்கு வெளியே தனது வலது கையை நீட்டியவாறு பயணித்துள்ளார், இது குறித்து பேருந்து நடத்துனரோ அல்லது ஓட்டுனரோ அவருக்கு எவ்வித எச்சரிக்கையும் விடுக்கவில்லை, மனுதாரரின் கவனக்குறைவு மற்றும் போக்குவரத்து விதிகளைப் பின்பற்றாததே விபத்து நிகழ்வதற்குக் காரணமாகும், விதிகளைப் பின்பற்றவில்லை என்றும் பயணிகளை எச்சரிப்பது பேருந்து நடத்துநர் மற்றும் ஓட்டுநரின் கடமையாகும்***, முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் தரப்பில் எவ்வித கவனக்குறைவும் இல்லை, காவல்துறையின் விபத்து நிகழ்விட வரைபடத்தின்படி, விபத்து மேற்கு–கிழக்குச் சாலையின் இடதுபுற மூலையில் நிகழ்ந்துள்ளது, எனவே, ***மூன்றாவது எதிர்மனுதாரரின் பேருந்து தனது இடதுபுறத்திலிருந்து வலதுபுறமாக நகர்ந்ததன் காரணமாகவே, பேருந்துக்கு வெளியே வலது முழங்கையை நீட்டியிருந்த மனுதாரர் மீது, முதல் எதிர்மனுதாரரின் 'Mahindra Supro Mini Truck' மோதியது, ஆகையால், இந்த விபத்திற்கு மனுதாரர், மூன்றாவது எதிர்மனுதாரரான பேருந்து ஓட்டுநர் மற்றும்***

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:51:09 +0530

நடத்துநர் ஆகியோரே முழுமையாகப் பொறுப்பாவார்கள், எனவே, மனுதாரருக்கு இழப்பீடு பெற உரிமை இருக்குமாயின், 3, 4 எதிர்மனுதாரர்கள் மட்டுமே அந்த இழப்பீட்டைச் செலுத்தப் பொறுப்பாவார்கள், 1, 2 எதிர்மனுதாரர்கள் எவ்வித இழப்பீடும் செலுத்தப் பொறுப்பானவர்கள் அல்ல என்றும், முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் மீது காவல்துறையினர் தவறான முறையில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளனர், ***மனுதாரர் தனது வலது கையை வேண்டுமென்றே மற்றும் தன் விருப்பத்தின் பேரில் ஜன்னலுக்கு வெளியே நீட்டி, கூறப்படும் காயங்களை வரவழைத்துக் கொண்டதால், மனுதாரரின் தரப்பிலும் அலட்சியம் உள்ளது என்றும், மனுதாரரின் இந்தச் செயல் "Volenti Non Fit Injuria" என்பதற்குச் சமம்*** என்றும், எனவே தனது சொந்த முயற்சியால் தனக்கு ஏற்பட்டதாகக் கூறப்படும் காயங்களுக்கு இந்த எதிர்மனுதாரர் பொறுப்பல்ல என்றும், இழப்பீட்டுத் தொகையை 3, 4 எதிர்மனுதாரர்கள் மட்டுமே செலுத்த வேண்டும், ***மனுதாரரின் 'பங்களிப்பு அலட்சியம் என்பது (contributory negligence) கணக்கில் கொள்ளப்பட்டு, அவருக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை அதற்கேற்ப குறைக்கப்பட வேண்டும்*** என்றும், மேலும், 3 ஆம் எதிர்மனுதாரரின் வாகனம் தான் விபத்து நிகழக் காரணமாக அமைந்தது என்றும், மேலும், TN 68 AA 6015 என்ற பதிவு எண் கொண்ட 'Mahindra Supro Mini Truck' வாகனத்தின் ஓட்டுநர், விபத்து நடந்த சமயத்தில் செல்லுபடியாகும் மற்றும் நடைமுறையில் உள்ள ஓட்டுநர் உரிமத்தைக் கொண்டிருக்கவில்லை, மோட்டார் வாகன விதிகள் 1989–இன் விதி 3 இன் கீழ் உள்ள நிபந்தனைகளை அவர் பூர்த்தி செய்யவில்லை, மோட்டார் வாகனச் சட்டம் 1988 மற்றும் அதன் பிந்தைய திருத்தங்களின் எந்தப் பிரிவும் மீறப்படவில்லை என்பதை மனுதாரர் தகுந்த ஆதாரங்களுடன் நிரூபிக்க வேண்டும் என்றும், 1 ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தை அந்த ஓட்டுநரிடம் ஒப்படைத்து, மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் அதன் கீழ் வகுக்கப்பட்ட விதிகளை மீறியுள்ளார் என்பதோடு, காப்பீட்டுக் கொள்கையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் மீறியுள்ளார், மேலும், விபத்து நடந்த சமயத்தில், TN 68 AA 6015 என்ற பதிவு எண் கொண்ட 'Mahindra Supro Mini Truck' வாகனம், பதிவுச் சான்றிதழ், தகுதிச் சான்றிதழ், சாலை வரி ரசீது, அனுமதிச் சீட்டு (Permit) போன்ற செல்லுபடியாகும் மற்றும் நடைமுறையில் உள்ள ஆவணங்கள் ஏதுமின்றி இயக்கப்பட்டது என்றும், இது மோட்டார் வாகனச் சட்டத்தின் விதிகள்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:51:17 +0530

மற்றும் காப்பீட்டுக் கொள்கையின் விதிமுறைகளை மீறும் செயலாகும் என்றும், மனுதாரரின் வயது மற்றும் வருமானம் ஆகியவற்றை மறுப்பதாகவும், மனுதாரர் ஒரு பகுதிநேர விவசாயத் தொழிலாளராக மாதம் ரூ.10,000/– ஈட்டி வந்தார் என்று கூறுவது தவறானது, தனது வருமானத்தை நிரூபிக்க எந்த ஆவணங்களையும் சமர்ப்பிக்கவில்லை, மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள மனுதாரரின் வயது, தொழில், வருமானம், மன மற்றும் உடல் ஆரோக்கிய நிலை, காயங்களின் தன்மை, சிகிச்சை முறை மற்றும் விபத்து நிகழ்ந்த விதம் ஆகிய அனைத்துக் கூற்றுகளையும் நிரூபிக்க மனுதாரர் கடமைப்பட்டுள்ளதாகவும், மனுவில் கூறப்பட்டுள்ளவாறு உண்மையில் எந்த விபத்தும் நிகழவில்லை, ரூ.50,00,000/– என்ற இழப்பீட்டுக் கோரிக்கை மிகவும் அதிகப்படியானது, 2 ஆம் எதிர்மனுதாரருக்கு விபத்து குறித்துத் தெரிவிக்கப்பட வில்லை என்றும், சம்மன் பெற்ற பின்னரே மேற்படி நிகழ்வைப் பற்றி அறிந்து கொண்டதாகவும், உரிமையாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கும் எந்தப் பதிலும் வரவில்லை என்றும், மோட்டார் வாகனச் சட்டப்பிரிவு 170 இன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மோட்டார் வாகனச் சட்டம் 1988 ன் பிரிவு 134 (c)–இன் படி, காப்பீட்டுதாரர் பாலிசி விவரங்கள், விபத்து நடந்த தேதி, நேரம் மற்றும் இடம் ஆகியவற்றை வழங்குவதும், காயமடைந்தவர்களின் விவரங்கள், ஓட்டுநரின் பெயர் மற்றும் ஓட்டுநர் உரிம விவரங்கள் ஆகியவற்றை வழங்குவதும் அவர்களின் கடமை என்றும், ஆனால் காப்பீடு செய்யப்பட்டவர் சட்டரீதியான கோரிக்கைகளுக்கு இணங்கவில்லை, எனவே, சட்டரீதியான கோரிக்கைகளுக்கு இணங்காததால் 2 ஆம் எதிர்மனுதாரர் எந்தவொரு இழப்பீடும் செலுத்தக் கடமைப்பட்டவர் அல்ல என்றும், மோட்டார் வாகனச் சட்டப்பிரிவு 158(6) இன் படி, விபத்து குறித்த தகவல் கிடைத்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள், தொடர்புடைய அனைத்து ஆவணங்களையும் சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனத்திற்கு அனுப்பி வைப்பது சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தின் கட்டாயக் கடமையாகும், ஆனால், சம்பந்தப்பட்ட காவல் நிலையம் அந்த ஆவணங்களை அனுப்பி வைக்கத் தவறியுள்ளதுடன், சட்டரீதியான கோரிக்கைகளுக்கும் இணங்கவில்லை என்றும், மேலும், மனுதாரருக்கு ஏற்பட்டதாகக் கூறப்படும் காயங்களுக்கும், விபத்து நிகழ்ந்ததாகக் கூறப்படும் விதம் அல்லது சூழலுக்கும் இடையே எவ்வித தொடர்பும் இல்லை, மனுதாரர் கோரியுள்ள

SUDHA P Digitally signed by SUDHA P
Date: 2026.04.09 18:51:25 +0530

12% வட்டி விகிதமானது மிகவும் அதிகமாக உள்ளது. மேலும், இது 'வட்டிச் சட்டம் 1978' (Interest Act 1978) இன் பிரிவு 3–க்கும், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் வழங்கியுள்ள தீர்ப்புகளின் கருத்துக்களுக்கும் முரணானதாகும். எனவே, இந்த மாண்புமிகு நீதிமன்றம் தகுந்த வட்டி விகிதத்தை மட்டுமே இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும், மேலும், விபத்து காலம் கோவிட்–19 பெருந்தொற்று காலம் (24 மார்ச் 2020 முதல்) விலக்கப்பட வேண்டும், 2020–ஆம் ஆண்டின் WP (C) எண் 534 வழக்கில் (தலைப்பு: Bajaj Allianz General Insurance Company Ltd எதிர் Union of India & Others), 2021 மார்ச் 16 அன்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம் உத்தரவின் படி எதிர்மனுதாரர் தனது ஒருங்கிணைப்பு அதிகாரிகளின் (Nodal Officers) விவரங்கள், தொலைபேசி எண்கள், மின்னஞ்சல் முகவரிகள் மற்றும் அலுவலக முகவரியை, 15–04–2021 தேதியிட்ட கடிதம் மற்றும் 14–05–2021 தேதியிட்ட மின்னஞ்சல் வாயிலாக ஏற்கனவே MACT–க்கு அனுப்பியுள்ளதாகவும், MACT ஆனது சம்மன் மற்றும் விபத்து அறிக்கை/இழப்பீட்டு மனு ஆகியவற்றை காப்பீட்டு நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்றும், அதற்குப் பதிலளிக்கும் வகையில், காப்பீட்டு நிறுவனம் தனது இழப்பீட்டுத் தீர்வுக்கான முன்மொழிவு அல்லது அறிக்கை/மனு மீதான பதிலைத் தொடர்புடைய தரப்பினருக்கு மின்னஞ்சல் வாயிலாக அனுப்ப வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும், மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களுக்கு இணங்க, உரிமைகோருபவர்களுக்கு சேவை செய்ததற்கான ஆதாரத்துடன் தீர்ப்பாயத்திற்கு அனுப்பப்பட்டும், பதிலளிக்கும் எதிர்மனுதாரருக்கு MACT–இன் அறிக்கை கிடைக்கவில்லை, MACT–இன் மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பப்படவில்லை, மனுதாரர் சட்ட விதிகளின்படி போதுமான நீதிமன்றக் கட்டணத்தைச் செலுத்தவில்லை, எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், மனுதாரர் ஏதேனும் இழப்பீடு பெறத் தகுதியுடையவர் என்று முடிவு செய்தால், அதனை 3 மற்றும் 4 வது எதிர்மனுதாரர்கள் மட்டுமே ஏற்க வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

04) 4 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :–

4 ஆம் எதிர்மனுதாரருக்கு கிடைத்த தகவலின்படி, 1 ஆம் எதிர்மனுதாரரின்

SUDHA P
Digitally signed by SUDHA P
Date: 2026.04.09 18:51:32 +0530

வாகனம் மேற்கூறிய விபத்தில் சம்பந்தப்படவில்லை, எனவே, மேற்கூறிய வாகனம் விபத்தில் ஈடுபட்டது என்பதையும், அவ்விபத்தின் காரணமாகவே மனுதாரர் அக் காயங்களைப் பெற்றார் என்பதையும் நிரூபிக்கும் கடமை மனுதாரருக்கே உரியதாகும் என்றும், தவறான தகவலின் அடிப்படையில் காவல்துறையினர் இவ்வழக்கைப் பதிவு செய்துள்ளதாகவும், இவ்விபத்தானது மனுதாரரின் பொறுப்பற்ற தன்மையினாலேயே நிகழ்ந்தது என்றும், அவர் தனது பயணத்தின்போது எச்சரிக்கையுடனும் கவனத்துடனும் செயல்படவில்லை என்றும், அவர் தனது பயணத்தில் விழிப்புடனும் கவனத்துடனும் இருந்திருப்பாரேயானால் அவருக்கு ஏற்பட்ட காயங்களைத் தவிர்த்திருக்க முடியும் என்றும், மனுவிலும் முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவர் தனது வலது கையை வாகனத்தின் ஜன்னலுக்கு வெளியே நீட்டியிருந்ததாகவும், மேலும், 1 ஆம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான வாகனம் எதிர்திசையில் வந்த மற்றொரு வாகனத்தைக் கடந்து செல்லும்போது, 3 ஆம் எதிர்மனுதாரரின் பேருந்துக்கு மிக நெருக்கமாக இயக்கப்பட்டதன் காரணமாகவே இவ்விபத்து நிகழ்ந்துள்ளது, எனவே, விபத்து நிகழ்ந்ததற்கு அவரே காரணம், அவரே அந்த விபத்தை வரவழைத்துக்கொண்டார், மனுதாரரின் கவனக்குறைவு மற்றும் பொறுப்பற்ற தன்மையினாலேயே இவ்விபத்து நிகழ்ந்துள்ளது, இத்தகைய சூழ்நிலையில், 3 ஆம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் தரப்பில் எவ்விதத் அஜாக்கிரதையோ கவனக்குறைவோ இல்லை, மேலும், 1 ஆம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான 'Tata Ace' வாகனத்தின் ஓட்டுநரின் ஓட்டுதல் முறையும் விபத்திற்கு ஒரு காரணமாக அமைந்தது, எனவே, 4 ஆம் எதிர்மனுதாரரால் எவ்வித இழப்பீடும் வழங்க இயலாது, இழப்பீடு வழங்க 1 ஆம் எதிர்மனுதாரர் மட்டுமே பொறுப்பாவார். 3 ஆம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான பேருந்தின் ஓட்டுநரே விபத்திற்கு உண்மையில் பொறுப்பு என்று முடிவெடுத்தால், மனுதாரரின் கவனக்குறைவு மற்றும் 1 ஆம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான 'Tata Ace' வாகனத்தின் ஓட்டுநரின் அஜாக்கிரதை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மனுதாரர் தரப்பில் 'பங்களிப்பு கவனக்குறைவு' (Contributory Negligence) இருப்பதாகவும், 1–வது எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் தரப்பில் 'கூட்டு கவனக்குறைவு' (Composite Negligence) இருப்பதாகவும் தீர்ப்பளிக்கலாம் என்றும், அதன் அடிப்படையில் மனுதாரரின் பங்களிப்பு கவனக்குறைவு எனும்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:51:38 +0530

கோட்பாட்டின்படி, இழப்பீட்டுத் தொகையை குறைத்து நிர்ணயிக்கலாம் என்றும், மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்கள் மிகைப்படுத்தப்பட்டுள்ளது, அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரணத் தன்மையுடையவையே தவிர, அவை எவ்வித ஊனத்தையும் ஏற்படுத்தவில்லை, சிகிச்சைக்காக மருத்துவமனையில் தங்கியிருந்த நாட்களின் எண்ணிக்கை, சிகிச்சைக்கான செலவுகள் மற்றும் சிகிச்சையின் தன்மை ஆகியவை அனைத்தும் உண்மையல்ல, விபத்தில் ஏற்பட்ட காயங்களின் காரணமாகத் தான் தனக்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்பதை மனுதாரர் நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளதாகவும், 4 ஆம் எதிர்மனுதாரருக்கு கிடைத்த தகவல்களின்படி சம்பந்தப்பட்ட நேரத்தில் எதிர்மனுதாரரின் வாகனத்தை இயக்கிய ஓட்டுநர், முறையான மற்றும் செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமத்தைக் கொண்டிருக்கவில்லை என்றும், சரிபார்ப்பிற்கு உட்பட்டு, குறிப்பிட்ட அந்த வாகனம் இந்த எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை என்றும், முதல் எதிர்மனுதாரரின் வாகனத்தை இயக்கிய ஓட்டுநர் செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம், அனுமதிச்சீட்டு மற்றும் பேருந்திற்கான தகுதிச் சான்றிதழ் ஆகியவற்றைக் கொண்டிருந்தார் என்பதையும், இந்த எதிர்மனுதாரரிடம் நடைமுறையில் உள்ள ஒரு காப்பீட்டுக் கொள்கை இருந்தது என்பதையும் நிரூபிக்கும் கடமை மனுதாரருக்கு உள்ளது என்றும், எனவே, இம்மனுவைச் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>05. இந்த மனுவில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனைகள் :–</u>

1. இந்த விபத்து யாருடைய கவனக்குறைவின் காரணமாக ஏற்பட்டது?
2. மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் யார்?
3. மனுதாரருக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டுத் தொகை எவ்வளவு?
4. மனுதாரருக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரம் என்ன?

06. இம்மனு விசாரணையின் போது மனுவின் மனுதாரர் சரண் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.1 ன் மூலம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.2 ஆக ஜி.வி.மருத்துவமனையின் மருத்துவர் ஸ்ரீதரும், ம.சா.3 ஆக மயிலாடுதுறை அரசு

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:51:46 +0530

பொது மருத்துவமனையின் பொது மருத்துவர் ராஜ்குமாரும் விசாரிக்கப்பட்டுள்ளனர், ம.சா.2 ன் மூலம் ம.சா.ஆ.15 மற்றும் ம.சா.ஆ.16 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் டாடா ஏஸ் வாகனத்தின் ஓட்டுனர் இளவரசன் எ.ம.சா.1 ஆகவும், பேருந்தின் ஓட்டுனர் சதாம் உசேன் எ.ம.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்படவில்லை.

07. 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில், 1 ஆம் எதிர்மனுதாரருக்காக வாதம் செய்ய வேண்டி, தனியாக மோட்டார் வாகனச் சட்டப்பிரிவு 170–ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

08. <u>பிரச்சனை எண்.1 :–</u>

i) வழக்கு விசாரணையின்போது இம்மனுவின் மனுதாரர் சரண் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மனுசங்கதிகளை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார். ம.சா.1 – 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை சாட்சியத்தில் பேருந்தில் பயணம் செய்த வேறு யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை, பேருந்து மற்றும் டாடா ஏஸ் வாகனத்திற்கு எந்த சேதமும் இல்லை, மனுதாரர் ஓட்டுனர் பக்கத்தில் பேருந்தில் பின் புறத்தில் இருந்து மூன்றவாது இருக்கையில் ஜன்னல் ஓரத்தில் அமர்ந்திருந்ததாகவும், ***விபத்து நடந்த அன்று சங்கரன்பந்தல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சைக்கு சென்று, அங்கிருந்து மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு வந்து, அங்கு பார்க்க முடியாது என்று கூறியதால் கிருஷ்ணா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்ததாகவும், 6 மாதங்களுக்கு பிறகு பிளேட் எடுக்க அவர்கள் கூறியிருந்தனர் என்றும், 7 வது மாதத்தில் வலி வந்ததால் 3 பிளேட் வைக்கப்பட்டதில் 2 பிளேட் எடுத்துவிட்டதாகவும், கிருஷ்ணா மருத்துவமனையில் கையில் அறுவை சிகிச்சை செய்ததாகவும், கை முட்டியில் உள்ள பிளேட்டை அகற்றிவிட்டதாகவும், முன்கையில் உள்ள பிளேட் தற்போதும் உள்ளது*** என்றும், கை முட்டியில் இருந்து மணிக்கட்டு வரை சிகிச்சை எடுத்திருந்ததாகவும், கையை கட்டி வைத்திருந்த போது கழுத்திற்கும், முதுகிற்கும் பேலன்ஸ் காரணமாக வலி ஏற்பட்டதாகவும், 4 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை சாட்சியத்தில்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:51:53 +0530

மனுதாரர் பயணித்த பேருந்து மீதும் டிரக் மீதும் புகார் கொடுத்துள்ளதாகவும், மனுதாரர் பயணம் செய்த பேருந்தின் நடத்துனர் மற்றும் ஓட்டுனர் எச்சரிக்கை செய்யாதது தான் அவர்கள் மீது தவறு என்று சொல்லியுள்ளதாகவும், எதிரே வந்த டாடா ஏஸ் வாகனத்தின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதைதான் காரணம் என்று சொல்லியுள்ளதாகவும், டாடா ஏஸ் வாகனத்தின் ஓட்டுனர் சரியாக ஓட்டியிருந்தால் இவ்விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

ii) ம.சா.2 ஜி.வி.மருத்துவமனையின் மருத்துவர் ஸ்ரீதர் அவரது சாட்சியத்தில் கடந்த 05.09.2023 அன்று பணியில் இருக்கும் போது மனுதாரர் சரண் என்பவர் அவருக்கு வலது கையில் வலி மற்றும வீக்கம் இருப்பதாக அவரிடம் பரிசோதனைக்காக வந்ததாகவும், அவரை பரிசோதனை செய்து எக்ஸ்ரே எடுத்து பார்த்ததில் அவருக்கு வலது கையில் பிளேட் மற்றும் கம்பி பொருத்தப்பட்டு இருந்தது, மேலும் எலும்பு கூடிய நிலையில் இருந்தது, அறுவை சிகிச்சை செய்து பிளேட் மற்றும் கம்பியை நீக்க வேண்டும் என்று அறிவுரை கூறியதாகவும், அதற்கு சுமார் ரூபாய்.50/- ஆயிரம் வரை ஆகும் என்று சான்று வழங்கியதாகவும், அவருக்கு எடுத்த நுண்கதிர் படம் மற்றும் ம.சா.2 வழங்கிய சான்று ம.சா.ஆ.15 மற்றும் ம.சா.ஆ.16 ஆகும் என்றும், குறுக்கு விசாரணையில் 03.09.2023 அன்று மனுதாரரை பரிசோதனை செய்து 05.09.2023 அன்று சான்று வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

iii) ம.சா.3 மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனையின் பொது மருத்துவர் ராஜ்குமார் அவரது சாட்சியத்தில் கடந்த 17.11.2022 அன்று மனுதாரர் சரண் என்பவர் ஊனச்சான்று பெறுவதற்காக மருத்துவக்குழுவிடம் பரிசோதனைக்காக ஆஜரானதாகவும், அந்த மருத்துவக்குழுவில் 2 வது உறுப்பினராக ம.சா.3 இருந்ததாகவும், சரண் என்பவருக்கு ஊனச்சான்று Ortho மருத்துவர் மகேஷ் என்பவரால் வழங்கப்பட்டது, அவர் தற்போது உயிருடன் இல்லை, ம.சா.3 மருத்துவக்குழுவில் ஒரு உறுப்பினராக இருப்பதால் நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையை பெற்று அதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளதாகவும், மனுதாரருக்கு உள்ள குறைபாடானது நிரந்தர குறைபாடாகவும் இருக்கலாம் என்றால் இருக்கலாம் என்றும், ***<u>அவருடைய செயல்பாட்டுத்திறன் 40</u>***

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:52:00 +0530

<u>சதவீதம் என்று மருத்துவக்குழுவால் வழங்கப்பட்டுள்ளது. 60 சதவீதம் இயலாமைக்காக ஊனம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், மனுதாரருக்கு இடது கை மூட்டு சிதிலமடைந்து உள்ளது, சிதிலமடைந்த மூட்டை முழுவதுமாக மீட்டு உறுவாக்கம் செய்ய இயலாது என்றால் 100 சதவீதம் சரிசெய்ய முடியாது, அதற்கான சிகிச்சை அளித்தால் ஓரளவிற்கு சரிசெய்யலாம் என்றும்,</u> குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எலும்பு முறிவு சிகிச்சை நிபுணர் இல்லை என்றும், பல் மற்றும் முகம் சம்பந்தப்பட்ட சிறப்பு மருத்துவர் என்றும், ஊனச்சான்றிதழைப் பொருத்து குறிப்பாக வேறு ஒரு எலும்பு முறிவு சிறப்பு மருத்துவரால் தான் சாட்சியம் அளிக்க இயலும், ஊனச்சான்றினைப் பொறுத்து நேரடியாக மனுதாரரை பரிசோதனை செய்யாமல் எந்தவொறு ஆழமான கருத்தையும் என்னால் கருத்து தெரிவிக்க இயலாது, இந்த ஊனம் தற்காலிகமானதா, நிரந்தரமானதா என்று இந்த வழக்கை பொறுத்து ம.சா.3 ஆல் கூற இயலாது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

iv) எ.ம.சா.1 டாடா ஏஸ் வாகன ஓட்டுனர் அவரது சாட்சியத்தில் மனுதாரர் அவரது கைகளை ஜன்னலுக்கு வெளியே நீட்டி வந்ததால் எதிர்புறமாக வந்த எ.ம.சா.1ன் டாடா ஏஸ் வாகனத்தின் பின்புறத்தில் அவரது கை மோதி அவருக்கு காயம் ஏற்பட்டதாகவும், காவல் நிலையத்தில் பேருந்து ஓடடுனர், நடத்துனர் மற்றும் டாடா ஏஸ் வாகன ஓட்டனர் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்ததாகவும், அந்த வழக்கில் பேருந்தின் ஒட்டுனர் மற்றும் நடத்துனர் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் எ.ம.சா.1ம் ஒப்புக்கொண்டால் தான் வழக்கு முடியும் என்று போலீசார் சொன்னதால் எ.ம.சா.1 அதற்கு உடன்பட்டு அபராதம் செலுத்தி வழக்கை முடித்துக் கொண்டதாகவும், இவ்விபத்திற்கு எ.ம.சா.1ன் கவனக்குறைவு காரணம் இல்லை என்றும், எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையில் பேருந்தின் ஓட்டுனர் இருக்கை எ.ம.சா.1ன் வாகனத்திற்கு ஓரமாக இருந்ததாகவும், மனுதாரரின் கை எ.ம.சா.1ன் வாகனத்தில் தலைப்பாகத்தின் பின்னால் இணைக்கப்படும் கேரியரின் உள்ள இடத்தில் உள்ள கிளாம்பில் பட்டு காயம் ஏற்பட்டதாகவும், இரண்டு வாகனங்களுக்கும் இடையே போதுமான இடைவெளி இருந்தது, ஆனால் மனுதாரர் கையை நீட்டி வந்ததால் தான் விபத்து நடந்தது, ***<u>மனுதாரர் கையை முழுவதுமாக</u>***

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:52:09 +0530

நீட்டாமல் மடக்கியப்படி தான் வைத்திருந்தார் என்றால் சரிதான் என்றும், மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையில் எ.ம.சா.1 ஓட்டிச் சென்ற வாகனத்தின் எண். ***TN 68 AA 6015, மேற்படி வாகனம் 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது, அவர் வாகனத்தின் உரிமையாளர், மேற்படி வாகனம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது, காயம்பட்ட நபர் எதிர்திசையில் வந்த பேருந்தில் தான் வந்து கொண்டிருந்தார், மனுதாரர் எனது வாகனத்தில் தான் காயம்பட்டார் என்றால் சரிதான்*** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

v) எ.ம.சா.2 ஆக மனுதாரர் பயணம் செய்த பேருந்தின் ஓட்டுனர் சதாம் உசேன் விசாரிக்கப்பட்டுள்ளார், அவரது சாட்சியத்தில் 3 ஆம் எதிர்மனுதாரரின் வாகனமான பேருந்தை எ.ம.சா.2 ஓட்டியதாகவும், இவ்விபத்து 2019 ல் நடந்ததாகவும், மேற்படி பேருந்தில் பயணம் செய்த சரண் என்பவர் அந்த பேருந்தின் கடைசி இருக்கையில் வலதுபுறமாக அமர்ந்து பயணம் செய்தார், அவர் பேருந்திற்கு வெளியே கையை நீட்டிக்கொண்டு உட்கார்த்திருந்தார், எ.ம.சா.2 பேருந்தின் சைடு மிரரர் வழியாக அதனை பார்த்து அவரை எச்சரிக்கை செய்ததாகவும், முதலில் எச்சரிக்கை செய்ததும் அவரது கையை எடுத்துவிட்டார், பின்னர் வைத்துக்கொண்டார் என்றும், ***அவரது கையானது எதிர்புறமாக வந்த TATA ACE வாகனத்தில் இடித்துவிட்டதாகவும், மனுதாரர் தனது கையை வெளியே நீட்டாமலும், TATA ACE நெருக்கமாக வராமல் இருந்திருந்தாலும் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான் என்றும், TATA ACE வாகனத்தின் பாகங்கள் எதுவும் எனது பேருந்தில் இடிக்கவில்லை,*** இந்த விபத்தில் எனது குறைபாடு எதுவும் இல்லை என்றால் சரிதான் என்றும், இந்த விபத்துக்கு காரணம் மனுதாரரும், TATA ACE வாகனமும் தான் என்றால் சரிதான் என்றும், எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை சாட்சியத்தில் டாடா ஏஸ் வாகனத்திற்கும், பேருந்திற்கும், மற்ற பயணிகளுக்கும் மனுதாரரை தவிர காயங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றும், எ.ம.சா.2 ன் இருக்கை அருகில் இருந்த சைடு மிரருக்கும் எந்தவித சேதாரமும் இல்லை என்றும், டாடா ஏஸ் பேருந்தை விட்டு கணிசமான இடைவெளிவிட்டு சென்றது என்றால் சரிதான் என்றும், மேற்படி விபத்தில் அஜாக்கிரதை என்பது மனுதாரர் செய்த காரியம் தான் என்றும், ***மோட்டார் வாகன விதிகளின் படி படிகளில் தொற்றிக்கொண்டு வந்தாலும், படிகளில் தொங்கிக்கொண்டு வந்தாலும். சன்னலில் கைகளை நீட்டி சென்றாலோ, பேருந்தின்***

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:52:17 +0530

கூரைகளின் மீது ஏறினாலோ அதனை தடுத்து கட்டுகோப்புடன் பேருந்தை செலுத்தவேண்டியது மோட்டார் வாகன விதிகளின் படி நடத்துனர் மற்றும் ஓட்டுனரின் கடமை என்றால் சரிதான் என்றும், இரண்டாவது முறை மனுதாரர் பேருந்தை விட்டு கையை வெளியே நீட்டும் பொழுது எ.ம.சா.2 மற்றும் பேருந்தின் நடத்துனரோ அந்த மனுதாரரை வேறு இருக்கைக்கு மாற்றி உட்கார வைத்திருந்தால் மேற்படி விபத்தை தடுத்திருக்கலாம் என்றால் நாங்கள் கூறினாலும் அதனை கேட்கும் மனநிலையில் மனுதாரர் இல்லை என்றும், மேற்படி மனுதாரருக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்றால் எங்கள் கவனக்குறைவு இருந்ததால் எங்கள் பேருந்தின் காப்பீட்டு நிறுவனமான 4 ஆம் எதிர்மனுதாரர் தான நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்றால் சரிதான் என்றும், மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையில் 09.03.2020 ஆம் தேதி நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் நீதிமன்றத்தில் குற்றத்தை வினவியபோது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை கூறவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

vi) இவ்வழக்கு விபத்தானது 3 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான T.N.51 AX 3637 என்ற பதிவெண் கொண்ட நிவேதா தனியார் பேருந்தில் மனுதாரர் சரண் ஏறி பேருந்தின் வலது ஜன்னல் ஓரமாக அமர்ந்து பயணம் செய்தபோது மாலை 3.30 மணியளவில் பேருந்து சங்கரன்பந்தல் அடுத்து எரவாஞ்சேரி பாலம் அருகே கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றபோது பேருந்துக்கு எதிரே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி, வாழைத்தார்கள் ஏற்றிக்கொண்டு அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவரப்பட்ட T.N 68 AA 6015 என்ற பதிவெண் கொண்ட மஹிந்திரா மினி டிரக்கை ஓட்டிவந்த அதன் ஓட்டுநர் வாகனத்தை பேருந்தின் வலது ஓரத்தில் மோதியதில் மனுதாரருக்கு வலது முன்கையில் எலும்புகள் முறிந்து கொடுங்காயம் ஏற்பட்டது என்று மனுதாரர் தனது மனுவிலும் சாட்சியத்திலும் தெளிவாக சொல்லியுள்ளார். ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையிலும் கண்ணதாசன், 1 ஆம் எதிர்மனுதாரரின் டாடா ஏஸ் வாகன ஓட்டுநர் இளவரசன், பேருந்தின் ஓட்டுனர் சதாம் ஹுசேன் ஆகியோர் மீது வழக்கு பதியப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. ம.சா.ஆ.3 மினி டிரக் TN 68 AA 6015 ன் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை பார்க்கும் போது 09.12.2019 அன்று

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:52:24 +0530

நிகழ்ந்த விபத்து குறித்து பொறையார் காவல் நிலைய குற்ற எண்.228/2019 வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் தணிக்கைக்கு உட்படுத்தியபோது, வாகனத்தின் உரிமையாளர் என்ற இடத்தில் சின்னப்பராஜ் என்பவர் பெயரும், விபத்தின் போது வாகனத்தை ஓட்டியவர் இளவரசன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும், இவ்விபத்து டாடா ஏஸ் வாகனம் 2 ஆம் எதிர்மனுதாரரான பஜாஜ் அலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும் தெளிவாக தெரியவருகிறது. மேலும், ம.சா.ஆ.6 விபத்தின் போது மனுதாரர் பயணம் செய்த பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை ஆகும், மேற்படி ம.சா.ஆ.6 ஆவணத்திலிருந்து மேற்படி பேருந்தின் உரிமையாளர் என்ற இடத்தில் முருகன் என்பவர் பெயரும், விபத்தின் போது பேருந்தை ஓட்டியவர் என்ற இடத்தில் சதாம் ஹுசேன் என்பவரது பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும், மேற்படி வாகனம் 4 ஆம் எதிர்மனுதாரரான நியூ இந்தியா அஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், தெளிவாக தெரியவருகிறது.

vii) எனவே, ம.சா.1, எ.ம.சா.1 மற்றும் எ.ம.சா.2 ன் சாட்சியம் வாக்குமூலம் மற்றும் ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.6 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது இம்மனுவில் கண்ட விபத்தானது 3 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான T.N 51 AX 3637 என்ற பதிவெண் கொண்ட நிவேதா தனியார் பேருந்தில் ஏறி பேருந்தின் வலது ஜன்னல் ஓரமாக மனுதாரர் அமர்ந்து பயணம் செய்தபோது, பேருந்துக்கு எதிரே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி, வாழைத்தார்கள் ஏற்றிக்கொண்டு அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவரப்பட்ட T.N 68 AA 6015 என்ற பதிவெண் கொண்ட மஹிந்திரா மினி டிரக்கை ஓட்டிவந்த அதன் ஓட்டுநர் வாகனத்தை பேருந்தின் வலது ஓரத்தில் மோதியதில் மனுதாரருக்கு இம்மனுவில் சொல்லியுள்ள காயங்கள் ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரியவருகிறது என்பதால் மனுதாரர் பயணம் செய்த பேருந்து ஓட்டுனர், மனுதாரரின் கை அடிப்பட்ட பேருந்தின் ஓரமாக மஹிந்திரா மினி டிரக்கை ஓட்டிவந்த அதன் ஓட்டுநர் ஆகியோரின் கவனக்குறைவாலேயே இவ்விபத்து ஏற்பட்டது என்றும், எனவே 1 மற்றும் 3 ஆம் எதிர்மனுதாரர்கள்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:52:31 +0530

இருவருமே இவ்விபத்திற்கு காரணம் என்றும் இத்தீர்ப்பாயம் பிரச்சனை எண்.1 க்கு தீர்வு காண்கிறது.

09. பிரச்சனை எண்.2 :–

i) ஏற்கனவே பிரச்சனை எண்.1–க்கு மனுதாரர் பயணம் செய்த பேருந்து ஓட்டுனர், மனுதாரரின் கை அடிப்பட்ட பேருந்தின் ஓரமாக மஹிந்திரா மினி டிரக்கை ஓட்டிவந்த அதன் ஓட்டுநர் ஆகியோரின் கவனக்குறைவாலேயே இவ்விபத்து ஏற்பட்டது என்றும், எனவே 1 மற்றும் 3 ஆம் எதிர்மனுதாரர்கள் இருவருமே இவ்விபத்திற்கு காரணம் என்றும் இத்தீர்ப்பாயம் பிரச்சனை எண்.1 க்கு தீர்வு கண்டுள்ளது.

ii) மேற்படி 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனம் விபத்து காலத்தில் 2 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் காப்பீடு செய்யப்பட்டு அக்காப்பீடு நிலுவையிலிருந்துள்ளது என்பதை நிரூபிக்க காப்பீட்டின் நகல் ம.சா.ஆ.4 ஆக மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனம் விபத்து காலத்தில் 4 ஆம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் காப்பீடு செய்யப்பட்டு அக்காப்பீடு நிலுவையிலிருந்துள்ளது என்பதை நிரூபிக்க காப்பீட்டின் நகல் ம.சா.ஆ.7 ஆக மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பாலிசி விதி மீறல் எதுவும் இருந்ததாக எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கும் இல்லை. ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.7 லிருந்து பார்க்கும்போது விபத்து வாகனம் விபத்து சமயத்தில் 2 மற்றும் 4 ஆம் எதிர்மனுதாரர்களின் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்பதும், அந்த காப்பீடு விபத்து சமயத்தில் செல்லத்தக்கதாக இருந்துள்ளது என்பதும் தெளிவாக தெரியவருகிறது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

iii) ம.சா.ஆ.4 ன் படி விபத்து மஹிந்திரா மினி டிரக் வாகனத்திற்கு 01.08.2019 முதல் 31.07.2020 வரை இன்சூரன்ஸ் நிலுவையில் இருந்துள்ளது என்பதும், ம.சா.ஆ.7 ன் படி மனுதாரர் பயணம் செய்த பேருந்திற்கு 08.07.2019 முதல் 07.07.2020 வரை இன்சூரன்ஸ் நிலுவையில் இருந்துள்ளது என்பதும், இக்கால இடைவெளியில் அதாவது 09.12.2019 ஆம் தேதி தான் மனுதாரருக்கு விபத்து

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:52:38 +0530

ஏற்பட்டுள்ளது என்பதும் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையிலிருந்தும் தெரியவருகிறது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் விபத்து சமயத்தில் 1 ஆம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனர் இளவரசன் என்பவருக்கு முறையாக ஓட்டுனர் உரிமம் இருந்தது என்பது ம.சா.ஆ.5 ஆவணத்தின் வாயிலாகவும், 3 ஆம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனர் சதாம் ஹுசேன் என்பவருக்கு முறையாக ஓட்டுனர் உரிமம் இருந்தது என்பது ம.சா.ஆ.8 ஆவணங்களின் வாயிலாகவும், தெரியவருகிறது.

iv) எனவே, 1 ஆம் எதிர்மனுதாரரின் வாகனமான மஹிந்திரா மினி டிரக் வாகனத்தை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் இளவரசன் மற்றும் 3 ஆம் எதிர்மனுதாரரின் வாகனமான பேருந்தை ஓட்டிவந்த அதன் ஓட்டுநர் சதாம்ஹுசேன் இருவரும் சட்ட விதிமுறைகளின்படியும், அவ்வாகனத்திற்கு தேவையான அனைத்து விதிமுறைகளை பின்பற்றியும் தான் மேற்படி வாகனத்தினை இயக்கியுள்ளார்கள் என்பது தெளிவாக தெரியவருகிறது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

v) எனவே, 1 மற்றும் 3 ஆம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் பாலிசி விதிமீறல் இல்லை என்ற நிலையிலும், 1 ஆம் எதிர்மனுதாரர் ஓட்டிச் சென்ற வாகனம் 2 ஆம் எதிர்மனுதாரரின் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், 3 ஆம் எதிர்மனுதாரர் வாகனம் 4 ஆம் எதிர்மனுதாரரின் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், அந்த காப்பீடு விபத்து நடந்த சமயத்தில் நிலுவையில் இருந்துள்ளது என்ற நிலையிலும், மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கான உரிய இழப்பீட்டுத் தொகையினை 2 மற்றும் 4 ஆம் எதிர்மனுதாரர்களே கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்று பிரச்சனை எண்.2 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

10. பிரச்சனை எண்.3 :-

i) மேற்படி விபத்தில் காயம்பட்ட மனுதாரருக்கு வலது முன்கையில் எலும்புகள் முறிந்து கொடுங்காயம் ஏற்பட்டும், வலது மணிக்கட்டில் எலும்புமுறிவு ஏற்பட்டும், வலது கை முழுவதும் சதை சிதைந்தும், மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கு முதல் உதவி சிகிச்சை பெற்று, அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மயிலாடுதுறை கிருஷ்ணா மருத்துவமனையில்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:52:45 +0530

உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு கடந்த 09.12.2019 முதல் 24.12.2019 வரை சிகிச்சை பெற்றுவந்துள்ளார் என்பதும், மனுதாரருக்கு மேற்படி மருத்துவமனையில் கடந்த 09.12.2019 ஆம் தேதி அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்பதும், மனுதாரர் தற்போது வெளிநோயாளியாக இருந்து தனியார் மருத்துவரிடம் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்து, அதன் பிறகு கடந்த 31.07.2020 முதல் 04.08.2020 வரை மனுதாரர் மீண்டும் கிருஷ்ணா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளார் என்பது ம.சா.ஆ.2, ம.சா.ஆ.13, ம.சா.ஆ.14 ஆகிய ஆவணங்களான டிஸ்சார்ஜ் சம்மரிகள் வாயிலாக அறிந்துக்கொள்ள முடிகிறது. மேலும், மயிலாடுதுறை மருத்துக்வகுழுவால் வழங்கப்பட்ட நீ.ம.சா.ஆ.1–ல் மனுதாரருக்கு ஏற்பட்டதாக சொல்லப்படும் ஊனம் 60% சதவீதம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிலையில் ***ம.சா.3 சாட்சியத்தில் மனுதாரருக்கு உள்ள குறைபாடானது நிரந்தர குறைபாடாகவும் இருக்கலாம் என்றால் இருக்கலாம் என்றும், அவருடைய செயல்பாட்டுத்திறன் 40 சதவீதம் என்று மருத்துவக்குழுவால் வழங்கப்பட்டுள்ளது. 60 சதவீதம் இயலாமைக்காக ஊனம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், மனுதாரருக்கு இடது கை மூட்டு சிதலமடைந்து உள்ளது, சிதலமடைந்த மூட்டை முழுவதுமாக மீட்டு உறுவாக்கம் செய்ய இயலாது என்றால் 100 சதவீதம் சரிசெய்ய முடியாது, அதற்கான சிகிச்சை அளித்தால் ஓரளவிற்கு சரிசெய்யலாம் என்றும் சாட்சியம் அளித்துள்ளதை கருத்தில் கொண்டும், Re assessment பற்றி குறிப்பு எதுவும் எழுதப்படவில்லை என்றால் நிரந்தர ஊனமாக இருக்கும் பட்சத்தில் குறிப்பு எதுவும் எழுதாமல் இருக்கலாம் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளதை கருத்தில் கொண்டும், இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையிலும், மேற்படி ஊனம் மனுதாரரின் வயதின் அடிப்படையிலும், மனுதாரரின் அன்றாட வாழ்க்கை, படிப்பு, திருமண வாழ்க்கை, எதிர்கால வாழ்க்கை மற்றும் சம்பாதிக்கும் திறனையும் பாதிக்கிறது என்பதை கருத்தில் கொண்டும் மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனமானது நிரந்தர ஊனமாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.***

மேலும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு, சாட்சியம் ஆகியவற்றில் மனுதாரருக்கு வலது முன்கையில் எலும்புகள் முறிந்து கொடுங்காயம்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:52:52 +0530

ஏற்பட்டும், வலது மணிக்கட்டில் எலும்புமுறிவு ஏற்பட்டும், வலது கை முழுவதும் சதை சிதைந்து மயிலாடுதுறை கிருஷ்ணா மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு கடந்த 09.12.2019 ஆம் தேதி அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, அதன்பின்னர் வெளிநோயாளியாக இருந்து தனியார் மருத்துவரிடம் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 31.07.2020 முதல் 04.08.2020 வரை மனுதாரர் மீண்டும் கிருஷ்ணா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, முழுங்கையில் உள்ள தகடு அகற்றப்பட்டது என்றும், மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்றும், மனுதாரருக்கு வலது கை முழுவதும் விபத்தினால் முற்றிலுமாக பாதிக்கப்பட்டு விட்டது என்றும், சிகிச்சை அளித்தும் பூரண குமாகவில்லை என்றும், மனுதாரருக்கு வலது கையில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக நிரந்தர ஊனம் ஏற்பட்டதால் மனுதாரரால் முன்புபோல பகுதி நேர வருமானம் ஈட்ட முடியாத நிலையில் கஷ்ட ஜீவனம் செய்து வருவதாகவும், மேலும், மனுதாரர் வலதுகையை மடக்கவோ, நீட்டவோ முடியாமலும், கல்லூரிக்கு செல்லவோ, எழுதவோ, படிக்கவோ முடியாமலும் அடுத்தவர்கள் துணையை நாட வேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளதாகவும், மனுதாரர் வலிவேதனையால் அவதியுற்று, அவரது குடும்பத்திற்கு சொல்லொண்ணா கஷ்டத்தை ஏற்படுத்தி உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள மேற்படி சங்கதிகளை கருத்தில்கொண்டும், மனுதாரருக்கு ஏற்பட்ட ***ஊனமானது மனுதாரர் 16 வயது மட்டுமே நிரம்பியவர் என்பதை கருத்தில் கொண்டும், அவரது அன்றாட வாழ்க்கை, படிப்பு, திருமண வாழ்க்கை, எதிர்கால வாழ்க்கை மற்றும் சம்பாதிக்கும் திறனையும் பாதித்துள்ளது என்பதை கருத்தில் கொண்டும், மேற்படி விபத்தினால் தற்சமயம் கல்லூரிப்படிப்பை தொடர முடியாமலும், பகுதி நேர வருமானம் ஈட்ட முடியாமலும் மிகுந்த சிரமப்படுவதாகவும், மனுதாரரின் வலதுகை முற்றிலும் பாதிக்கப்பட்டு மனுதாரரின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விட்டதாகவும், எதிர்காலத்தில் வேலைக்குச் செல்லவோ, மேல்படிப்பு படிக்கவோ, வருமானம் ஈட்டவோ முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் மனுதாரரின் திருமண வாழ்க்கையும் கேள்விக்குறி ஆக்கப்பட்டுள்ளதாகவும், இதுவரை ரூ.5,00,000/-த்திற்கும் அதிகமாக செலவாகியுள்ளதாகவும், தொடர் சிகிச்சை பெற வேண்டிய நிலையில் உள்ளதால் வெளிநபர்களிடம் கடன்கள் வாங்கி மருத்துவச்***

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:52:59 +0530

<u>செலவு செய்து வருவதால் மிகுந்த பொருளாதார நெருக்கடியில் மன உளைச்சலுடன் வாழ்ந்து வருவதாக மனு மற்றும் சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளதை கருத்தில் கொண்டு பார்க்கும்போது இந்த வழக்கில் Future Prospects Multiplier எடுத்துக்கொள்ளலாம் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.</u>

11. மனுதாரருக்கு விபத்து சமயத்தில் 19 வயது என்றும், மனுதாரர் பொறையார் TBML கல்லூரியில் 3 ஆம் ஆண்டு பட்டப்படிப்பு படித்து வருவதுடன் காலை, மாலை வேளைகளிலும், விடுமுறை தினங்களிலும் மனுதாரர் விவசாயப் பணிகள் செய்து மாதம் ஒன்றுக்கு ரூ.10,000/-க்கும் குறையாமல் வருமானம் ஈட்டி தனது குடும்பத்திற்கு கொடுத்து வந்து, கல்லூரிப்படிப்பை கவனித்து வந்ததாகவும், மனுதாரரின் பகுதிநேர வருமானம் அவரது குடும்பத்திற்கு பேருதவியாக இருந்து வந்ததாகவும் வழக்கிடை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அதைப்பொருத்து எவ்வித ஆவணங்களும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. எனினும் தற்கால வாழ்க்கை மற்றும் விலைவாசி ஏற்றம் மற்றும் பொருளாதார சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு மனுதாரரின் மாதவருமானம் ரூ.10,000/- என நிர்ணயம் செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று முடிவு செய்து மனுதாரரின் மாதவருமானம் ரூ.10,000/- என்று நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரர் வழக்கிடை ஆவணங்களில் 19 வயது என்று குறிப்பிட்டுள்ள நிலையில் மனுதாரருக்கு வழங்கப்பட்ட ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.13 டிஸ்சார்ஜ் சம்மரியில் மனுதாரருடைய வயது 19 என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் மனுதாரருடைய வயது 19 என்றே இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

12. நமது மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற **2020 (1) TN MAC 449 (DB) N.Kirubakaran & Abdul Quddhose, JJ. மேற்கண்ட தீர்ப்புரையில்**

MOTOR ACCIDENT CLAIMS Compensation – Quantum Enhancement – injured/claimant aged 28 years, a car driver suffered Brain injury and loss of left eye brain injury resulting in paralysis of right side body 100% disability assessed by medical board Tribunal fixing disability at 33% and notional income at Rs.6,000p.m., awarded Rs.4,37,920 as Total Compensation – If,

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:53:07 +0530

on lower sides – Permanent Disability / Loss of Earning Capacity : Tribunal fixing 33 % disability, when claimant suffered from paralysis, held not proper High Court fixed Loss of Earning Capacity at 100 % – Notional Income: Since accident occurred in year 2013, High Court fixed Notional Income Rs.15,000/–p.m. : Adding 40% towards future Prospects, monthly Income fixed at Rs.21,000/–p.m. as against Rs.6,000/– p.m. fixed by Tribunal – Loss of Earning Capacity : Applying Multiplier of 17, High Court awarded Rs.42,84,000(Rs.21,000 x12x17) towards 100% disability as against Rs.4,03,920 awarded by Tribunal – Attendant Charges : Considering nature of injury, disability and necessity of attendant round the clock, High Court awarded Rs.18,00,000/– (Rs.6,000x12 x25years) as against Rs.2,000 awarded by Tribunal – Pain and Suffering : Enhanced from Rs.5000 to Rs.1,00,000 – Loss of Amenities : No amount awarded by Tribunal : Rs.3,00,000 awarded by High Court in view of 100% disability – Future Medical Expenses : Not been awarded by Tribunal : Considering nature of injuries and need of continuous treatment High Court awarded Rs.2,00,000 – Loss of Marital Bliss to wife of injured : Injured/Claimant not capable of performing marital obligations towards wife due to 100% disability : Considering age of wife, High Court awarded Rs.5,00,000 to wife – Total Compensation Rs.74,84,000 : Since Claimant found to be under influence of Alcohol as per Discharge Summary, High Court fixed 10% Contributory Negligence : Deducting 10%, Total Compensation arrived at Rs.67,35,600 as against Rs.4,37,920 awarded by Tribunal

ATTENDANT CHARGES – Award of – injured /Claimant, aged 28 years, suffered head injury resulting in paralysis of right side limbs – not able to do any work on his own and dependant upon others for day today activities –100% disability – attendant on his side all the times necessary– relying upon decision in Kavita, High court fixing attendant charges at Rs.6000 p.m. awarded Rs.18,00,000(Rs.6,000 x 12 x25 years) towards attendant charges for 25 years as against Rs.2,000 awarded by Tribunal என்று சொல்லப்பட்டுள்ளது. மேற்கண்ட தீர்ப்புரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்த வழக்கின் தன்மை மற்றும் பொருண்மைக்கு முற்றிலும் பொருந்துவதாக அமைவதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:53:13 +0530

13. மேலும், மாண்புமிகு உச்சநீதிமன்றம் **<u>Special Leave Petition (Civil) No.25590 of 2014 National Insurance Company Limited/Vs/Pranay Sethi and others.</u>** வழிகாட்டுதலின்படி, நிரந்தர வருமானம் இல்லாத 19 வயது நபர்களுக்கு எதிர்கால வருமானமாக 40 சதவீதம் எடுத்துக்கொள்ளலாம் என்று தீர்ப்பளித்துள்ளது. எனவே, அதன்படி ரூ.10,000/- X 40% 100 = ரூ.4000/- ஆகும். இந்தத் தொகையையும், மனுதாரரின் மாத வருமானத்துடன் சேர்த்து (ரூ.10,000/- + ரூ.4000/-) = ரூ.14,000/- இந்த தொகை மனுதாரரின் மாத வருமானமாக நிர்ணயிக்கப்படுகிறது. பிரனாய் சேத்தி வழக்கு தீர்ப்புரையின்படி மனுதாரரின் வயதான 19 க்குரிய பெருக்கல் குறியீடு 18 ஆகும். அவ்வகையில் இவ்விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட இழப்பீடு ரூ.14,000/- X 12 X 18 X 60 ÷ 100 = ரூ.18,14,400/- ஆகும்.

<u>i) வலி மற்றும் வேதனை (pain and Sufferings, mental agony):-</u>

மனுதாரருக்கு வலது முன்கையில் எலும்புகள் முறிந்து கொடுங்காயம் ஏற்பட்டும், வலது மணிக்கட்டில் எலும்புமுறிவும், வலது கை முழுவதும் சதை சிதைந்தும் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கு முதல் உதவி சிகிச்சை பெற்று, அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மயிலாடுதுறை கிருஷ்ணா மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு கடந்த 09.12.2019 முதல் 24.12.2019 வரை சிகிச்சை பெற்றும் கடந்த 09.12.2019 ஆம் தேதி அறுவை சிகிச்சை செய்யப்பட்டும், தனியார் மருத்துவரிடம் தொடர்ந்து சிகிச்சை பெற்றும் வந்து, அதன் பிறகு கடந்த 31.07.2020 முதல் 04.08.2020 வரை மீண்டும் கிருஷ்ணா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளார் என்பது ம.சா.ஆ.2, ம.சா.ஆ.13, ம.சா.ஆ.14 ஆகிய ஆவணங்களான டிஸ்சார்ஜ் சம்மரிகள் வாயிலாக அறிந்துக்கொள்ள முடிகிறது. எனவே, மனுதாரருக்கு ஏற்பட்ட காயம், எலும்பு முறிவு, மனுதாரர் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டது ஆகியவற்றை கருத்தில் கொண்டு **<u>வலி மற்றும் வேதனைக்காக அவருக்கு ரூ.1,00,000/- கிடைக்கக்கூடியது என்று இந்த தீர்ப்பாயம்</u> முடிவு செய்கிறது.** மனுதாரர் சிகிச்சையில் இருந்தபோது மருந்துகள் உட்கொண்ட

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:53:26 +0530

வகைக்கு ம.சா.ஆ.10 ஆவணமாக ரூ.1,32,640/-தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தலைப்பின் கீழ் **ம.சா.ஆ.10 ஆவணத்தின்** **<u>அடிப்படையில் ரூ.1,32,640/- மனுதாரருக்கு கிடைக்கதக்கது என தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது</u>**. மனுதாரர் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்ட காலகட்டத்தில் அவர் சத்துள்ள ஆகாரங்களை உட்கொண்டிருக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு **<u>ஊட்டச்சத்துணவிற்காக ரூ.10,000/- வழங்க இந்தத் தீர்ப்பாயம் முடிவுசெய்கிறது.</u>** மனுதாரர் மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்ட காலகட்டத்தில் அவருடன் இருந்து அவரை கவனித்துக்கொள்ள உதவியாளர் இருந்திருக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு **<u>உதவியாளருக்கான செலவிற்காக ரூ.10,000/-மனுதாரருக்கு வழங்க இந்தத் தீர்ப்பாயம் முடிவுசெய்கிறது.</u>** மனுதாரருக்கு ஏற்பட்ட எலும்பு முறிவிற்காக அவரை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல போக்குவரத்து செலவு ஏற்பட்டிருக்கும் என்பதை கருத்தில் கொண்டு மனுதாரருக்கு **<u>போக்குவரத்து செலவிற்காக ரூ.10,000/- வழங்க இந்தத் தீர்ப்பாயம் முடிவுசெய்கிறது.</u>** மனுதாரருக்கு வலது கை முழுவதும் விபத்தினால் முற்றிலுமாக பாதிக்கப்பட்டு, சிகிச்சை அளித்தும் பூரண குமாகவில்லை என்றும், மனுதாரருக்கு வலது கையில் ஏற்பட்ட எலும்பு முறிவு காரணமாக நிரந்தர ஊனம் ஏற்பட்டதால் மனுதாரரால் முன்புபோல பகுதி நேர வருமானம் ஈட்ட முடியாத நிலையில் கஷ்ட ஜீவனம் செய்து வருவதாகவும், மனுதாரர் வலதுகையை மடக்கவோ, நீட்டவோ முடியாமலும், கல்லூரிக்கு செல்லவோ, எழுதவோ, படிக்கவோ முடியாமலும் அடுத்தவர்கள் துணையை நாட வேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளதாகவும், மேலும் மனுதாரர் வலிவேதனையால் அவதியுற்று, அவரது குடும்பத்திற்கு சொல்லொண்ணா கஷ்டத்தை இவ்விபத்து ஏற்படுத்தியுள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளதை கருத்தில்கொண்டு **<u>வசதி வாய்ப்பு இழப்பிற்காக ரூ.75,000/</u>**- வழங்க இந்தத் தீர்ப்பாயம் முடிவுசெய்கிறது. மேலும், ம.சா.2 அளித்துள்ள எதிர்கால செலவு குறித்த ம.சா.ஆ.15 ல் மனுதாரருக்கு ரூ.50,000/- செலவாகும் என்று ம.சா.2 சாட்சியம் அளித்து சான்று வழங்கியதன் அடிப்படையில் மனுதாரருக்கு **<u>எதிர்கால மருத்துவ செலவிற்காக ரூ.50,000/- வழங்க இந்தத் தீர்ப்பாயம் முடிவுசெய்கிறது.</u>**

SUDHA P

Digitally signed by SUDHA P
Date: 2026.04.09 18:53:35 +0530

14. கீழ்கண்ட பட்டியலின் கீழ் இழப்பீட்டுத்தொகை கணக்கிடப்படுகிறது.

வ. எண்	தலைப்பு		இழப்பீட்டுத் தொகை
1.	வருமான இழப்பிற்காக(Loss of Income) 10,000X40%= 4000= Rs.14,000/- ரூ.14,000/-X 12X18 X60 ÷ 100 = ரூ.18,14,400/-	ரூ.	18,14,400/-
2.	வலி மற்றும் வேதனைக்கு இழப்பீடாக (pain and Sufferings, mental agony)	ரூ.	1,00,000/-
3.	மருத்துவ செலவு (Medical Bills)	ரூ.	1,32,640/-
4.	ஊட்ட சத்துணவு செலவிற்காக (Extra Nourishment)	ரூ.	10,000/-
5.	உதவியாளர் செலவு (Attender Charges)	ரூ.	10,000/-
6.	போக்குவரத்து செலவிற்காக	ரூ.	10,000/-
7.	வசதி வாய்ப்பு இழப்பிற்காக (Loss of Amenities)	ரூ.	75,000/-
8.	எதிர்கால மருத்துவ செலவு	ரூ.	50,000/-
	மொத்தம்	**ரூ.**	**22,02,040/-**

ஆக மொத்தம் மனுதாரருக்கு மொத்த இழப்பீட்டுத் தொகையாக ரூ**22,02,040/- (ரூபாய். இருபத்து இரண்டு லட்சத்து, இரண்டாயிரத்து நாற்பது மட்டும்)** கிடைக்கத்தக்கது என்று முடிவு செய்யப்படுகிறது.

15. மேலும், 2, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ***மனுதாரரின் 'பங்களிப்பு அலட்சியம் என்பது (contributory negligence) கணக்கில் கொள்ளப்பட்டு, அவருக்கு வழுங்கப்படும் இழப்பீட்டுத் தொகை அதற்கேற்ப குறைக்கப்பட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் எ.ம.சா.1 மற்றும் எ.ம.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்ட இருவருமே விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களின் ஓட்டுனர்களே ஆவார்கள். எனவே அவர்களது சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு மனுதாரர் பேருந்திற்கு வெளியே கையை நீட்டி வைத்திருந்தார் என்று ஏற்றுக்கொள்ள இயலாது, மேலும் எ.ம.சா.1 டாடா ஏஸ் வாகன ஓட்டுனர் மனுதாரர் கையை முழுவதுமாக நீட்டாமல் மடக்கியப்படி தான் வைத்திருந்தார் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் பேருந்தில்***

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:53:44 +0530

பயணம் செய்த மற்ற பயணிகளை சாட்சியமாக விசாரித்து அவர்களது தரப்பில் மனுதாரர் அவரது கையை பேருந்திற்கு வெளியில் தான் வைத்திருந்தார் என்று நிரூபணம் செய்யவில்லை, எனவே பங்களிப்பு அவசியம் என்ற அடிப்படையில் மனுதாரருக்கு கிடைக்கக் கூடிய இழப்பீட்டுத் தொகையில் எவ்விதமான தொகையும் பிடிக்கப்படவில்லை, இதுவே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

16. பிரச்சனை எண்.4 :-

மனுவின் செலவுத்தொகை மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்றும் வேறு பரிகாரம் எதுவும் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் பிரச்சனை எண்.4-க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

17. i) முடிவில், இம்மனு பகுதியாக மனுதாரரின் செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, **2 மற்றும் 4 ஆம் எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு மொத்த இழப்பீட்டு தொகையாக தலா ரூ.11,01,020/- மொத்தம் ரூ.22,02,040/-(ரூபாய். இருபத்து இரண்டு லட்சத்து, இரண்டாயிரத்து நாற்பது மட்டும்)** கொடுக்க வேண்டும்மென்று உத்தரவிடப்படுகிறது.

ii) மேற்படி இழப்பீட்டு தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரை மனுதாரரின் தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும் காலம் தவிர 7.5 % சதவிகிதம் ஆண்டு வட்டி சேர்த்து இந்த உத்தரவு தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

iii) மேற்படி இழப்பீட்டுத் தொகையை 2 மற்றும் 4 ஆம் எதிர்மனுதாரர்கள் மயிலாடுதுறை பாரத மாநில வங்கி கிளையில் உள்ள இந்த மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாய கணக்கு எண்.42800964666-ல் *NEFT / RTGS mode* மூலம் செலுத்த வேண்டும் மென்றும், செலுத்திய விபரத்தை இந்நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மனுதாரர்/உரிமைகோருபவர் மோட்டார் வாகன விபத்து கோருரிமைத் தீர்ப்பாயத்திலிருந்து NEFT or RTGS மூலம்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:53:51 +0530

வட்டியுடன் சேர்ந்த அவரது முழு இழப்பீட்டு தொகையை வங்கியில் திரும்பப்பெற அனுமதிக்கப்படுகிறார்.

iv) பாக்கி நீதிமன்றக் கட்டணமான ரூ.21,021/-யை மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து பத்து நாட்ளுக்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.

வழக்குரைஞர் கட்டணம் ரூ.39,520/- என நிர்ணயம் செய்யப்படுகிறது.

இவ்வுத்திரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 09 ஆம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:53:58 +0530

மோட்டார் வாகன விபத்து உரிமை கோரிக்கை தீர்ப்பாய நீதிபதி,
முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை.

Particulars provided as per the Judgment of Hon'ble Madras High Court in M/S Cholamandalam MS Genl Ins.Co.Ltd., - Vs- Mr.Ayyanar, Tr.C.M.P.No.264 to 2020, dated 11.05.2020 தேதியிட்ட உத்தரவுப்படி தீர்ப்பாணை தனியாக தயாரிக்கப்படவில்லை.

மனு எண்.73/2020

1.	(Name and Address of the Claimant) (மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்)	சரண், வயது 19, த.பெ.செல்வராஜ், சித்தாம்பூர், மாரியம்மன் கோவில் தெரு, கோமல் அஞ்சல், குத்தாலம் தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம் தற்போது மயிலாடுதுறை மாவட்டம்.
2.	Name and Address of the Respondents (எதிர்மனுதாரர்களின் பெயர் மற்றும் விலாசம்)	1. சின்னப்பராஜ், வயது 50, த.பெ. செல்வராஜ், நெ.707A, மாதா கோயில் தெரு, கும்பகோணம் மேல காவேரி, பெருமாபாண்டி, கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்,

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:54:05 +0530

		2. கிளை மேலாளர், பஜாஜ் அலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி, F2 5 வது தளம், கதவிலக்கம் 497/498, ஐசானா கட்டிமா பில்டிங், சென்னை மாநகராட்சி, சென்னை 600 106, 3. முருகன், வயது 60, த.பெ. முனுசாமி, கதவிலக்கம் 10, பொறையார், தோட்டம் மேலவீதி, தரங்கம்பாடி தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம் தற்போது மயிலாடுதுறை மாவட்டம். 4. கிளை மேலாளர், நியூ இந்தியா அஸ்யூரன்ஸ் கம்பெனி லிட், S.S. பிள்ளை காம்ப்ளக்ஸ் தரைதளம், தோட்டம் கீழவீதி, பொறையார், தரங்கம்பாடி தாலுக்கா, நாகப்பட்டினம் மாவட்டம் தற்போது மயிலாடுதுறை மாவட்டம்.
3.	Date of Filing of the Claim Petition (மனுதாக்கல் செய்யப்பட்ட நாள்)	24.08.2020, 28.10.2020
4.	Date of Award (உத்தரவு பகரப்பட்ட நாள்)	08.04.2026
5.	Amount of Award (வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை)	**ரூ.22,02,040/-(ரூபாய். இருபத்து இரண்டு லட்சத்து, இரண்டாயிரத்து நாற்பது மட்டும்)**
6.	Interest Rate Applicable	7.5%
7.	Date from which interest is payable (எந்த நாளிலிருந்து வட்டி வழங்கப்படவேண்டும்)	மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரை (மனுதாரரின் தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்ட காலத்தை தவிர்த்து) வட்டி வழங்க உத்தரவிடப் படுகிறது Dismissed for default period நீங்கலாக)

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:54:13 +0530

<table>
<tr>
<td>8.</td>
<td>Costs if any</td>
<td>
2 மற்றும் 4 ஆம் எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு செலவுத் தொகையான ரூ.61,215/-யை கொடுக்க வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.

2 மற்றும் 4 ஆம் எதிர்மனுதாரர்களுக்கு இம்மனுவில் ஏற்பட்ட செலவுத்தொகை ரூ.12,210/-யை அவர்களே ஏற்கவேண்டும்.

(Stamp Duty of Rs.21,392.90 -372= Rs.21,020.90 @ Rs.21,021/-- The petitioner Shall pay the balance Court fee of Rs.21,021/- within 10 days.
<table>
<tr><th colspan="3"><u>Particulars of costs</u></th></tr>
<tr><th colspan="2"><u>For Petitioner</u></th><th><u>For Respondent</u></th></tr>
<tr><td></td><td>Rs.</td><td>Rs.</td></tr>
<tr><td>Court fee Rs.21,392.90-372= Rs.21,020.90 @ Rs.21,021/-</td><td>21,393.00</td><td></td></tr>
<tr><td>Stamp in Vakalath</td><td>10.00</td><td>10.00</td></tr>
<tr><td>Fee for services of process 4.50 + 47.50= Rs.52/-</td><td>52.00</td><td></td></tr>
<tr><td>Stamp on Exhibits</td><td>40.00</td><td></td></tr>
<tr><td>Typing charge</td><td>200.00</td><td>200.00</td></tr>
<tr><td>Advocate fee</td><td>39,520.00</td><td>12,000.00</td></tr>
<tr><td>Total</td><td>61,215.00</td><td>12,210.00</td></tr>
</table>
</td>
</tr>
<tr>
<td>9.</td>
<td>The Mode and manner of deposit of Compensation
(இழப்பீட்டுத் தொகையை வைப்பீடு செய்யப்படும் வழிமுறை)</td>
<td>
<u>முடிவாக, இம்மனு கீழ்கண்டவாறு பகுதியாக செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.</u>

i) 2 மற்றும் 4 ஆம் எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு மொத்த இழப்பீட்டு தொகையாக தலா ரூ.11,01,020/- மொத்தம் ரூ.22,02,040/-(ரூபாய். இருபத்து இரண்டு
</td>
</tr>
</table>

SUDHA P
Digitally signed by SUDHA P
Date: 2026.04.09 18:54:21 +0530

		லட்சத்து, இரண்டாயிரத்து நாற்பது மட்டும்) கொடுக்க வேண்டும்மென்று உத்தரவிடப் படுகிறது. ii) மேற்படி இழப்பீட்டு தொகைக்கு மனு தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் தொகை முழுவதும் செலுத்தப்படும் நாள் வரை மனுதாரரின் தவறுகையால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும் காலம் தவிர 7.5 % சதவிகிதம் ஆண்டு வட்டி சேர்த்து இந்த உத்தரவு தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. iii) மேற்படி இழப்பீட்டுத் தொகையை 2 மற்றும் 4 ஆம் எதிர்மனுதாரர்கள் மயிலாடுதுறை பாரத மாநில வங்கி கிளையில் உள்ள இந்த மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாய கணக்கு எண்.42800964666–ல் *NEFT / RTGS mode* மூலம் செலுத்த வேண்டும் மென்றும், செலுத்திய விபரத்தை இந்நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப் படுகிறது. மனுதாரர்/ உரிமைகோருபவர் மோட்டார் வாகன விபத்து கோருரிமைத் தீர்ப்பாயத்திலிருந்து NEFT or RTGS மூலம் வட்டியுடன் சேர்ந்த அவரது முழு இழப்பீட்டு தொகையை வங்கியில் திரும்பப்பெற அனுமதிக்கப் படுகிறார். iv) பாக்கி நீதிமன்றக் கட்டணமான ரூ.21,021/–யை மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து பத்து நாட்ளுக்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது. வழக்குரைஞர் கட்டணம் ரூ.39,520/– என நிர்ணயம் செய்யப்படுகிறது.
10.	The Mode and manner of Disbursement (மேற்படி இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் வழிமுறை)	Through *NEFT / RTGS*

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:54:28 +0530

11.	Date of payable Balance Court Fee (பாக்கி நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டிய நாள்)	பாக்கி நீதிமன்றக் கட்டணத்தை மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது.

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:54:35 +0530

மோட்டார் வாகன விபத்து உரிமை கோரிக்கை தீர்ப்பாய நீதிபதி,
முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை.

1. மனுதாரர் தரப்பு சாட்சிகள் :–

ம.சா.1 – திரு. சரண் (மனுதாரர்)

ம.சா.2 – மருத்துவர் ஸ்ரீதர் – ஜி.வி. மருத்துவமனை மருத்துவர்

ம.சா.3 – மருத்துவர் ராஜ்குமார் – பொது மருத்துவர், மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனை

2. மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :–

ம.சா.ஆ.1	–11.12.2019	முதல் தகவல் அறிக்கை நகல்
ம.சா.ஆ.2	– 24.12.2019	கிருஷ்ணா மருத்துவமனையின் விடுவிப்பு சான்று
ம.சா.ஆ.3	– 12.12.2019	TN 68 AA 6015 மகேந்திரா மினி டிராக்டரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் நகல்
ம.சா.ஆ.4	– 01.08.2019	1 ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு நகல்
ம.சா.ஆ.5	–08.12.2010	ஓட்டுனர் உரிமம் நகல்
ம.சா.ஆ.6	– 12.12.2019	3 ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் TN 51 AX 3637 (Bus) மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல்
ம.சா.ஆ.7	08.07.2019	3 ஆம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு சான்று
ம.சா.ஆ.8	– 10.11.2005	3 ஆம் எதிர்மனுதாரர் (சதாம் ஹுசேன்) வாகன ஓட்டுனரின் ஓட்டுனர் உரிமம் நகல்
ம.சா.ஆ.9	– ---	மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் மற்றும் ஆதார் அட்டையின் நகல்
ம.சா.ஆ.10	– 09.12.2019 – 04.08.2020	மருத்துவ பில்கள்
ம.சா.ஆ.11	– 09.01.2020	கிருஷ்ணா மருத்துவமனையின் காயச்சான்று நகல்

SUDHA P Digitally signed by SUDHA P Date: 2026.04.09 18:54:42 +0530

ம.சா.ஆ.12 – 09.03.2021 STC–3/2020 வழக்கின் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல்

ம.சா.ஆ.13 – 09.12.2019 அரசு பெரியார் மருத்துவமனையின் விபத்து பதிவேடு மற்றும் மருத்துவ விடுவிப்பு குறிப்பு

ம.சா.ஆ.14 – 04.08.2020 கிருஷ்ணா மருத்துவமனையின் விடுவிப்பு சான்று

ம.சா.ஆ.15 – 05.09.2023 மனுதாரருக்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் படம்

ம.சா.ஆ.16 – 03.09.2023 மருத்துவர் வழங்கிய எதிர்கால மருத்துவ செலவு சான்று

3. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :–

எ.ம.சா.1 – திரு. இளவரன் – டாடா ஏஸ் வாகன ஓட்டுனர்

எ.ம.சா.2 – சதாம் உசேன் – பேருந்தின் ஓட்டுனர்

4. எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :– இல்லை.

5. நீதிமன்ற சான்றாவணங்கள் :–

நீ.ம.சா.ஆ.1 – 17.11.2022 ஊனச்சான்று

SUDHA P Digitally signed by SUDHA P
Date: 2026.04.09 18:54:48 +0530

மோட்டார் வாகன விபத்து உரிமை கோரிக்கை தீர்ப்பாய நீதிபதி,
முதன்மை சார்பு நீதிபதி, மயிலாடுதுறை.

Draft/ Fair Order
MCop.No. 73/2020
09.04.2026.